**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 223 /2022**

**Deposition of P.W.** 1

Name : திரு. ராபர்ட் ராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 23.04.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது ஆறுகாணி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை கவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 30.04.2020ம் தேதி சுமார் 11.30 மணிக்கு காட்டாத்துறை, மஞ்சாடி பகுதியில் நானும், உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. பிரபகுமார், மற்றும் திரு. ராஜன் ஸ்டேன்லி ஆகியவர்கள் மதுவிலக்கு தொடர்பான ரோந்து பணியில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி வீட்டின் பின்பு தோட்டத்தில் வைத்து கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. நாங்கள் அங்கு சென்ற உடன் எதிரி எங்களை பார்த்த உடன் ஓடினார். நாங்கள் 4 பேரும் சேர்ந்து அவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் மத்தியாஸ் மகன் ரமேஷ் என்று சொன்னார். தோட்டத்தை சோதனை செய்த போது வடித்த சாராயம் 30 லிட்டர் விஷ சாராயம் இருந்தது. 750 மில்லி பிடிக்ககூடிய பாட்டிலில் மாதிரி எடுத்து கொண்டு மீத சாராயத்தை கொட்டி அழித்து விட்டோம். அத்தாட்சியில் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1.காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் 30.04.2020ம் தேதி நடந்தது. நான் முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 30.04.2020ம் தேதி காலை 11.30 மணியா, மாலை 11.30 மணியா என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரகசிய தகவல் தொலைபேசி மூலம் கிடைத்தது. அந்த தொலைபேசி எண்ணை தற்போது நீதிமன்றத்தில் கூறமுடியாது. ரகசிய தகவல் சொன்னவரை சாட்சியாக விசாரிக்கவில்லை. நாங்கள் பார்க்கும் போது சம்பவ இடத்தில் எதிரி மட்டும் தான் இருந்தார். 2, 3 பானைகள் இருந்தது. ஒரு பானையில் சாராயம் இருந்தது. மற்ற இரண்டு பானைகள் தயார் செய்யக்கூடிய பொருட்கள் இருந்தது. சாராயம் தயாரிக்க பயன்படுத்திய பொருட்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை. 30 லிட்டர் சாராயத்தை ஒரு நபரால் காய்ச்சி மாற்றி வைக்க முடியாது என்றால் சரியல்ல. எதிரி சாராயம் வடிக்கவும் இல்லை, நாங்கள் கைப்பற்றவும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக நாங்களே சான்று பொருளை உ எற்பத்தி செய்து எதிரிமீது வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.